# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 177 /மா/2017**

**ஆணை எண்: 272/2017**

**நாள்: 04/12/2017**

திரு. த. சு. இரா.நேத்தாஜி மார்த்தாண்டன்,
பல்லாவரம், சென்னை. - **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி. - **எதிர்மனுதாரர்**

சென்னை–43, பல்லாவரம், பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, 4/92 இலக்கமிட்ட முகவரியில் வசித்துவரும் திரு.த.சு.இரா.நேத்தாஜி மார்த்தாண்டன் என்பவரின் 04.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2017 அன்று பெறப்பட்டு 177/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி மாநகர நல அலுவலரின் 04.10.2017 நாளிட்ட அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாநகரம் பல்லாவரம், பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, 4/92 இலக்கமிட்ட முகவரியில் வசித்துவரும் திரு. த.சு.இரா. நேத்தாஜி மார்த்தாண்டன் என்பவர் 12.10.2016ல் திருநெல்வேலியில் பிறந்த தனது மகளின் பிறப்புச் சான்றில் நே. அபிராமவல்லி என்னும் பெயரைப் பதிவு செய்திடவும், பெயர் பதிவுடன் பிறப்புச் சான்று பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்காக

ரூ.125/-க்கு வரைவோலையும் இணைத்து 13.04.2017 அன்று திருநெல்வேலி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணபத்திருந்த நிலையில் எந்தவிதமான பதிலும் கிடைக்கப் பெறாததால் 14.06.2017 அன்று மீண்டும் ஒரு மனுவினை அனுப்பியிருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இம்முறைமன்ற நடுவத்தில் தனது மகளின் பிறப்புச்சான்று நகல்களை வழங்கிடவும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் சொல்லப்பட்ட மற்றும் 21.09.2015 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை அரசு ஆணை எண்.99-இல் கூறப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கேட்டும், தனது காசோலையினை மாநகராட்சி கணக்கில் வரவாக்கப்படவில்லை போன்ற புகார்கள் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2) முறையீட்டாளரின் புகார் குறித்து திருநெல்வேலி மாநகராட்சியின் மாநகர நல அலுவலரிடம் அறிக்கை பெறப்பட்டது. அவர் தமது 04.10.2017 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் விண்ணபத்தின்மீது சட்டப்படி உரிய கால கெடுவிற்குள் (time line) கடமையாற்றத் தவறியதற்கும் காசோலை தொகையினை வரவாக்கப்படவில்லை என்பதற்கும் எழுத்தர்மீது குறிப்பாணை ஏற்படுத்தி ஒழுங்குநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், மனுதாரரின் விண்ணபத்தின்மீது உரிய அலுவலக நடைமுறைகளை மேற்கொண்டு குழந்தையின் பெயரினைப் பதிவு செய்து குழந்தை பெயருடன் கூடிய ஐந்து எண்ணிக்கையிலான பிறப்புச் சான்றிதழ் 28.09.2017 அன்று பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

3) முறையீட்டு மனுதாரரிடம் அவரது முறையீடு குறித்து 27.11.2017 அன்று விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தாம் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் முறையீடு செய்த பின்னர்தான் மாநகராட்சியில் பிறப்புப் பதிவு சான்றிதழ் தனக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆனால் இன்னமும் விதிகளின்படி கணினியில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அனைத்து மாநகராட்சிகளிலும் மனுதாரர்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே பிறப்புச் சான்றிதழ் பெறும் வசதி செய்யப்பட்டிருந்தும் அந்த வசதி திருநெல்வேலி மாநகராட்சியில் செய்யப்படாததின் காரணத்தினாலேயே தனக்கும் கணினிச் சான்று கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் திருநெல்வேலி மாநகராட்சி இணையதளப் பதிவுகளைப் பதிவிறக்கம் செய்தபொழுது, 2016-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்த்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவி காலம் முடிவடைந்த பின்னரும், முன்னாள் மேயர் திருமதி. புவனேஸ்வரி என்பவரே

மேயராக உள்ளதாக தொலைபேசி எண்களுடனும் புகைப்படத்துடன் இணையதளத்தில் தொடர்ந்து பதிவில் உள்ள விபரம் தெரிய வருவதாகவும், அதுபோன்றே தனது குழந்தையின் பெயருடன் சான்றிதழ் வழங்கியிருந்தும் குழந்தையின் பெயர் இணையதளத்தில் பதிவுகள் ஏற்றப்படாமல் உள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலையும் தாக்கல் செய்துள்ளார். அதே இணையதளத்தில் தாம் சில பதிவுகளைத் தேடிய பொழுது பதிவு எண்.2245 தளவாய்புரம் பர்கிட்மா நகரைச் சேர்ந்த எஸ்.எஸ்.பொன் ஆரியா என்பவருக்கு பதிவு எண்.2245 மற்றும் 2246 என இரு பதிவுகளாகக் காணப்படுகிறது என்று தெரிவித்து அவற்றின் நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரரின் மனு, திருநெல்வேலி மாநகராட்சி மாநகர நல அலுவலரின் அறிக்கை மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அவர் இம்முறைமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரரின் விண்ணப்பத்தின்மீது 21.9.2015 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அரசு ஆணை எண் 99 மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறிய அலுவலர்கள் மீது திருப்தியளிக்கக்கூடிய வகையில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. மாநகராட்சி நல அலுவலரின் அறிக்கை திருப்தி அளிப்பதாய் இல்லை. முறையீட்டாளரின் குழந்தையின் பெயரைப் பதிவு செய்து தபால் மூலம் சான்றிதழ் வழங்கியுள்ள நிலையில், கணினியில் பெயர் பதிவு செய்யப்படாத நிலை மற்றும் பதவிகாலம் முடிவடைந்த பின்னரும் மாநகராட்சியின் இணையதளத்தில் முன்னாள் மேயரின் பெயர், புகைப்படம், தொலைபேசி எண்கள் காணப்படும் நிலை மற்றும் முன்பத்தியில் எடுத்துக்காட்டாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு இணையதளத்தில் ஒரே நபருக்கு இரு எண்களில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளமை ஆகியவை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பொறுப்பற்ற கடமை தவறிய நிலை, மற்றும் மாநகராட்சியின் நிர்வாக சீர்கேடுகளைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. இச்சீர்கேடுகளை உடன் போக்கிடவும், சம்பந்தப்பட்ட எழுத்தர்கள் மட்டுமல்லாது மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்யும் பொறுப்பான உயர் அலுவலர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், மாநகராட்சியின் இணையதளத்தில் (அன்றன்றைய நிலைக்கேற்ப பதிவுகளைப் பதிவு செய்யவும் (update), மாநகராட்சியின் இணையதளம் சம்பந்தமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளையும் சீர் செய்வதுடன், முறையீட்டாளருக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்ட பெயருடன் கூடிய பிறப்புச்

சான்றிதழ் உண்மைத்தன்மை வாய்ந்ததா என உறுதிப்படுத்தும் வகையில் அவரது குழந்தையின் பெயரை கணினியில் உடன் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கையினை மாநகராட்சி நல அலுவலரின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொண்டு 30 நாட்களுக்குள் முடிவான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. த.கு. இரா. நேத்தாஜி மார்த்தாண்டன்,
   4/92, பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு,
   பல்லாவரம், சென்னை -600 043.

2. ஆணையர்,
   திருநெல்வேலி மாநகராட்சி,
   திருநெல்வேலி.

**நகல்:** 1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.

2. முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்.